| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 27/12/2023 | முதல் | 31/12/2023 |
| அறிக்கை எண் : | 103/ 2023 | வெளியீட்டு நாள் : | 26/12/2023 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°-32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (21.12.2023 **முதல்** 25.12.2023) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 31-12-2023- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/12 | 22/12 | 23/12 | 24/12 | 25/12 | தேதி | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 1.8 | 2.4 | 0.0 | 0.0 | 1.5 | மழை (மி.மீ) | 1 | 3 | 5 | 5 | 3 |
| 25 | 31 | 31 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 30 | 30 | 29 | 29 |
| 23 | 21 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 21 | 21 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 7 | 8 | 8 | 7 |
| 79 | 80 | 85 | 80 | 86 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 100 | 90 | 90 | 90 | 90 |
| 90 | 67 | 56 | 70 | 65 | | 60 | 70 | 70 | 70 | 70 |
| 7 | 5 | 7 | 9 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 8 | 8 |
| வட மேற்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 28, 29, 30 மற்றும் 31ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

மேகமூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் மஞ்சள் நிற **ஒட்டுபொறி** வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் **நடமாட்டத்தையும், ஊதா** நிற **ஒட்டுபொறி அட்டை வைத்து அசுவினி மற்றும் இலைத்துளைப்பான் நடமாட்டத்தையும்** கண்காணிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பருத்தி, தக்காளி, கால்நடை.**

**பருத்தி:**
பருத்தி பயிரில் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் பிரச்சினை ஆங்காங்கே காணப்படுகிறது.

இதனை சரி செய்ய, பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள பருத்தி பயிரில் ஒரு ஏக்கருக்கு 2½கிலோ என்ற அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பருத்தி பிளஸ் எனும் வளர்ச்சி ஊக்கியினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.

இதன் மூலம் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் குறைகிறது ,காய் வெடிக்கும் தன்மை அதிகரிக்கிறது, பருத்தி விதை விளைச்சல் அதிகரிக்கிறது.

மேலும் இது பருத்திச் செடிக்கு, வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும் கொடுக்கிறது.

**தக்காளி:**
தோட்டக்கலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைத் தத்துப்பூச்சி, இலைபேன், வெள்ள ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்து கட்டுப்படுத்தலாம்.

தாக்குதல் அதிகம் காணப்படும் நேரங்களில் 1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் வேப்பங் கொட்டை கரைசல் அல்லது 30 மில்லி வேப்ப எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**
நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு கானை நோய் வர வாய்ப்பு உள்ளது. இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்கானை வாய்க்கானை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.